நாள் 07.11.2024

OS No.19/2015

பி.வா.சா.1, திரு.பெருமாள்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. இந்த வழக்கின் ஒன்றாவது பிரதிவாதி எனது தகப்பனார். இந்த வழக்கின் வாதி பிச்சம்மாள் என் உடன்பிறந்த சகோதரி. என் தகப்பனார் உடன் பிறந்த சகோதரி கிருஷ்ணம்மாள் என்று ஒருவர் இருந்தார். மேற்படி கிருஷ்ணம்மாளுக்கு திருமணம் ஆகவில்லை. வாரிசுகள் கிடையாது. மேற்படி கிருஷ்ணம்மாள் எனது அத்தை அவர் இலத்தூரில் வாழ்ந்தார். இறக்கும்போது மருத்துவமனையில் வைத்து இறந்தார். அதன் பின்னர், அவரது இறுதிச் சடங்கு இலத்தூரில் வைத்து நடந்தது. மேற்படி கிருஷ்ணம்மாள் இறக்கும் வரை எந்த வீட்டில் குடியிருந்தார் என்றால் அவர் மூன்று வீட்டில் குடியிருந்தார். வடக்கு பக்கம் உள்ள வீட்டிலும், அதற்கு பின்னர் எனது வீட்டிலும், வழக்கு சொத்திலும் குடியிருந்தார். உங்கள் அத்தை கிருஷ்ணம்மாள் சமுதாயத்தில் இருந்து இரண்டு சென்டு இடத்தை கிரயம் பெற்று, அந்த இடத்தில் தான் குடியிருந்து வந்தார் என்றால் இல்லை. அந்த இடத்தில் குடியிருக்கவில்லை. எனது வீட்டில் தான் குடியிருந்தார். எனது அத்தை கிரயம் பெற்ற இடம் தற்போதும் பொட்டலாக

தான் உள்ளது. எனது அத்தை கிரயம் வாங்கிய இடத்திற்கு கீழ்ப்பக்கம் வெள்ளை என்பவரது இடம் மேல்புறம் சுவர்ணம் என்பவரது மனை. வடக்கு பக்கம் கருப்பன் மனை. தெற்கு பக்கத்தில் கிழமேல் ரோடு உள்ளது.

2. இந்த வழக்கு சொத்தாக காட்டப்பட்டுள்ள கதவு எண். 34/1 கொண்ட வீடு உங்கள் அத்தை கிருஷ்ணம்மாள் கிரையம் பெற்ற இடத்தில் தான் இருந்து வருகிறது என்றால் மேற்படி கதவு எண் என்னுடைய வீட்டின் கதவு எண். அந்த இடம் என்னுடையது. காலி மனை தான் எனது அத்தை கிருஷ்ணம்மாளுக்குரியது. நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்துக்களை பார்வையிட்டார் என்ற விவரம் எனக்கு தெரியும். அவர் என்ன அறிக்கை கொடுத்தார் என்பது எனக்கு தெரியாது. நான் படித்து பார்க்கவில்லை. நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் வரைபடத்தில் வழக்கு சொத்தில் (உங்கள் அத்தை கிருஷ்ணமாளுக்கு உரிய இடம்) தான் மேற்படி கதவு எண். 34/1 கொண்ட வீடு உள்ளது என்றும், அதில் வாதி தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. தற்போது வரை நான் தான் வீட்டில் இருந்து வருகிறேன். அந்த வீட்டிற்கு கீழ் புறம் இரண்டு சென்டு காலி மனை உள்ளது. அதுதான் எனது அத்தைக்குரிய இடம்.

3. நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்து அறிக்கை மற்றும் வரைபடத்தில் உள்ள விபரங்கள் உண்மை என்பதால், தான் நீங்கள்

தற்போது வரை எந்த ஆட்சேபணையும் செய்யவில்லை என்றால் எனக்கு அதில் உள்ள விவரங்கள் தெரியாது. நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை அளவீடு செய்யும் போது நீங்கள் அங்கே இருந்தீர்களா என்றால் ஆமாம். நானும் இருந்தேன். நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய நீங்கள் தாக்கல் செய்த மனுவில் உங்களுடைய சொத்து என காட்டியுள்ள சொத்து புல எண்.389/7A2 என்ற சர்வே எண்ணில் தான் இருப்பதாக அளந்து காண்பித்துள்ளார்கள் என்றால் காலி மனையும் அதே சர்வே எண்ணில் தான் உள்ளது. வழக்கு சொத்து புலம் எண். 389/7B என்ற சர்வே எண்ணில் அமைந்துள்ளதாக நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்து காண்பித்துள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி புலம் எண். 389/7B இல் தான் கதவு எண். 34/1 வீடு உள்ளது என்றால் இல்லை.

4. நான் எனது இடம் என தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள 6 சென்டு இடத்திற்கு நான்கு பக்கங்கள் கருப்பன் மனைக்கு மேற்கு, சுவர்ணம் மனைக்கு கிழக்கு, தெற்கு மற்றும் வடக்கே கிழமேல் தெருவும் உள்ளது. உங்கள் அத்தை கிருஷ்ணம்மாளுக்குரிய இடத்தின் நான்கு பக்க எல்லைகள் வேறு என்றும், தற்போது பி.வா.சா.1 ஆவணத்தில் நீங்கள் கூறியுள்ள சொத்தின் எல்லைகள் வேறு என்றும் சொன்னால் சரிதான். வழக்குரை ஒன்றாவது தபசில் சொத்தை

கிருஷ்ணம்மாள் 1977 ஆம் ஆண்டு கிரயம் பெற்று அனுபவம் செய்து வந்தார் என்றும், அதை அவர் உயிரோடு இருக்கும் போதே வாதிக்கு 20/04/2006 ஆம் தேதி கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் அவ்வாறு எழுதிக் கொடுத்ததாக எனக்கு தெரியாது. 2006 ஆம் ஆண்டில் இருந்து வாதி தான் மேற்படி உங்கள் அத்தைக்குரிய இடத்தில் உள்ள வீட்டில் குடியிருந்து வருகிறார் என்றால் இல்லை. நான் தான் வீட்டில் குடியிருந்து வருகிறேன்.

5. வழக்குரை ஒன்றாவது தபசில் சொத்திற்குரிய வருவாய்த்துறை ஆவணங்கள் வாதியின் பெயரில்தான் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. கதவு எண்.34/1 வீட்டிற்கு வாதியின் பெயரில் தான் மின் இணைப்பு, குடிநீர் இணைப்பு தற்போது வரை உள்ளது என்றும், அவர்தான் அதற்குரிய கட்டணங்களை செலுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. அதற்கு கரண்ட் பில் வராது. அது 100 யூனிட்டுக்கு கீழே உள்ளதால் பணம் கட்ட வேண்டாம். வழக்குரை தபசில் சொத்தின் கிழ மேல் அளவு 25 அடி என்றால் ஆமாம். உங்கள் அத்தை வாங்கிய இடத்தில் வீடு 10 அடி அகலத்தில் உள்ளது என்றால் இல்லை. அது காலி மனை தான். வீடு இருந்தது என்றும், மேற்படி வீட்டிற்கு கீழ் பக்கம் உள்ள 15 அடி காலி இடத்தை முருகன் என்பவருக்கு விற்பனை செய்ய நீங்களும், உங்கள் தகப்பனாரும் கிரைய ஒப்பந்தம் செய்தீர்கள் என்றால் ஆமாம். அதனால்,

வாதி 2012 ஆம் ஆண்டு வீட்டிற்கு கிழக்கு பக்கம் உள்ள காலியிடம் தொடர்பாக அசல் வழக்கு எண். 116/2012-யை தாக்கல் செய்தார் என்றால் தெரியாது. மேற்படி வழக்கில் நீங்கள் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றும், தற்போது அதை மறைத்து சாட்சியமளிக்கிறீர்கள் என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி வழக்கில் வீடு ஒரு தபசில் சொத்தாகவும், காலி மனை மற்றொரு தபசில் சொத்தாகவும் காண்பிக்கப்பட்டு, அந்த இடங்கள் வாதிக்கு பாத்தியப்பட்டது என தீர்ப்பு ஏற்பட்டுள்ளது என்றால் இல்லை. மேற்படி அசல் வழக்கு எண். 116/2012 இல் உள்ள வழக்கின் தீர்ப்பை வாதி இந்த வழக்கிலும் தாக்கல் செய்துள்ளார் என்றும், அவை உண்மையானவை என்பதால் தான் தற்போது வரை அந்த தீர்ப்பின் மீது நீங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி வழக்கில் உள்ள விவரங்கள் உண்மை என்பதால்தான் நீங்கள் அதன் மீது நடவடிக்கை எடுக்காமல் இருந்துவிட்டு, இந்த வழக்கில் வேண்டுமென்றே தர்க்கம் செய்கிறீர்கள் என்றால் அந்த வழக்கு பற்றியது எனக்கு தெரியாது.

6. மேற்படி வழக்கில் தீர்ப்பு ஏற்பட்ட பின்னர்தான் நீங்கள் முருகனிடம் ஏற்படுத்தியிருந்த கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்து முருகனுக்கு பணத்தை திருப்பி கொடுத்தீர்கள் என்றால் ஆமாம். வாதி அவரது அத்தையிடமிருந்து

கிரயம் பெற்று அனுபவம் செய்துவரும் சொத்தை அனுபவம் செய்வதை நீங்கள் தான் இடையூறு செய்து வருகிறீர்கள் என்றும், அதனால், வாதி கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல. நீங்கள் இந்த வழக்கில் குறிப்பிட்டுள்ள 6 சென்ட் இடத்திற்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. வாதி கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

SUNIL RAJA MAHALINGAM

Digitally signed by SUNIL RAJA MAHALINGAM
Date: 2024.11.07 11:23:11 +0530

District Munsif cum Judicial Magistrate,
Shenkottai